## 12

## வெற்றிகரமான திருமணத்திற்கான வழிவகை ...

# சிறந்த பேரப்பிள்ளைகளைக் கொண்டிருக்க திட்டமிடுதல்!

பேரப்பிள்ளைகள் எல்லோருமே மகத்தானவர்கள். சந்தேகமிருந்தால், தாத்தா பாட்டியைக் கேட்டுப் பாருங்களேன். எனினும், குறிப்பாகச் சொல்லப் போனால், சில பேரப்பிள்ளைகள் மற்றவர்களைவிட மேலானவர்களாயிருப்பது உண்மைதான். அவர்கள், மற்ற பேரப்பிள்ளைகளைவிட ஆரோக்கியமானவர்களாகவும், கலகலப்பானவர்களாகவும், சாதனைபடைத்தவர்களாகவும், அதிமுக்கியமாக, முதலாவது தேவனுடைய இராஜ்யத்தை நாடுகிற இயல்புடையவர்களாகவும் காணப்படுகிறார்கள். நீங்கள் திருமணம் செய்து கொள்ளும்போது, பிள்ளைகளைப் பெற்றெடுக்க திட்டமிடுவீர்கள், அத்துடன் பேரப்பிள்ளைகளைக் குறித்த எதிர்பார்ப்பும் உங்களுக்கு நிச்சயம் இருக்கும். கட்டாயம் உங்களுக்கு கொள்ளுப் பேரப்பிள்ளைகள் இருப்பதற்கு, ஓர் எதிர்பார்ப்பின் அடிப்படையில், உங்களால் ஏதேனும் செய்திட இயலுமா?

புதிதாய் திருமணமானவர்கள், பேரப்பிள்ளைகளைப் பற்றி ஏன் சிந்திக்க வேண்டுமென்பதைப் பற்றி நாம் முதலாவதாகப் பார்ப்போம் (1) அவர்கள், அநேகமாக, கொஞ்ச காலத்திற்குள் பெற்றோர்களாகப் போகிறார்கள். திருமணமான பெரும்பான்மையான தம்பதியர் விரைவிலோ அல்லது தாமதமாகவோ பிள்ளைகளைப் பெற்றுக் கொள்ளுகின்றனர். பிள்ளைகளைப் பெறுவது என்பது உண்மையிலேயே, திருமணத்தில் நோக்கங்களில் ஒன்றாயிருக்கிறது. முதல் தம்பதியினரைப் பார்த்து தேவன், “பலுகிப் பெருகி, பூமியை நிரப்புங்கள்” என்று சொன்னார் (ஆதியாகமம் 1:28). அதே விதமாகவே, மனிதகுலம் நிலைத்திருப்பதற்காக (அந்த ஒழுங்கின்படியே!), ஆண்களும் பெண்களும் திருமணம் செய்து கொண்டு பிள்ளைகளைப் பெற வேண்டுமென தேவன் எதிர்பார்க்கிறார்.[1]

(2) தாங்கள் எடுக்கும் தீர்மானங்கள், வரப்போகும் சந்ததிகளை பாதிக்கும் என்பதை வாலிப மக்கள் உணரவேண்டும். ஆபிராமின் மந்தைமேய்ப்பவர்களுக்கும் லோத்தின் மந்தை மேய்ப்பவர்களுக்கும் இடையே சச்சரவு உண்டானபோது, லோத்து எவ்விடத்தில் குடியிருக்கவிரும்புகிறானோ அதனைத் தேர்ந்தெடுக்கும் உரிமையை ஆபிரகாம் அவனிடமே விட்டு விட்டார். லோத்து சோதோமில் குடியிப்பதைத் தெரிவுசெய்தான் (ஆதியாகமம் 13:10, 11); முடிவு, அவனது குடும்பத்தில் பயங்கரமான விளைவுகளை ஏற்படுத்திவிட்டது.[2] மோசமான தீர்மானங்களின் தீராத விளைவுகளை யாத்திராகமம் 20:5, 6ம்கூட எடுத்துக் காட்டுகிறது.

*நீ அவைகளை நமஸ்கரிக்கவும் சேவிக்கவும் வேண்டாம்; உன் தேவனாகிய கர்த்தராயிருக்கிற நான் எரிச்சலுள்ள தேவனாயிருந்து என்னைப் பகைக்கிறவர்களைக் குறித்து பிதாக்களுடைய அக்கிரமத்தை பிள்ளைகளிடத்தில் மூன்றாம் நான்காம் தலைமுறை மட்டும் விசாரிக்கிற வராயிருக்கிறேன். என்னிடத்தில் அன்புகூர்ந்து, என் கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களுக்கோ ஆயிரம் தலைமுறை மட்டும் இரக்கம் செய்கிறவராயிருக்கிறேன்.*

*இந்தப் பகுதியானது, பெற்றோர்களின் குற்றத்தை பிள்ளைகள் சுதந்தரித்துக் கொள்ளுகிறார்கள் என்று போதிப்பதில்லை. மாறாக, பிள்ளைகள் பெற்றோரது பாவங்களின் விளைவுகளை மூன்றாம் நான்காம் தலைமுறைவரைக்கும் அனுபவிக்கிறார்கள் என்பதையே அது நமக்கு நினைவூட்டுகிறது.[3] அதற்கு நேர்மாறாக, இஸ்ரவேலர்கள் கீழ்ப்படிதலுள்ளவர்களாயிருந்தால், அவர்களது பிள்ளைகள் பின்வரும் பல தலைமுறைகளுக்கும் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பார்கள் என்று தேவன் கூறியிருக்கிறார்.[4]*

*(3) பெற்றோர் தமது பிள்ளைகளை எவ்விதமாக பழக்கப்படுத்துகிறார்களோ, அது அவர்களது பேரப்பிள்ளைகளையும், அவர்களுக்கு பின்வரும் எல்லோரையுமே பாதிக்கக் கூடியதாயிருக்கிறது. ‘‘உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக’’ என்கிற ஐந்தாம் கட்டளையை உரைத்தபோதே தேவன் இந்த அடிப்படைக் கருத்தினைக் குறிப்பிட்டிருக்கிறார். அதற்கு கீழ்ப்படிய வேண்டியதற்கான ஓர் காரணத்தையும் அவர் சுட்டிக் காட்டியிருக்கிறார்: ‘‘தேசத்திலே உன் நாட்கள் நீடித்திருப்பதற்கு’’ (யாத்திராகமம் 20:12). பிள்ளைகள் அடங்காதவர்களாயிருந்தால், இந்த ஜனமானது நாடுகடத்தப்படக் கூடிய நிலைவந்துவிடும் என்பதாக, இந்தப் பகுதி எச்சரிக்கை விடுத்தது. புதிய உடன்படிக்கையின் கீழ்வரும் பிள்ளைகளுக்கு இதே அடிப்படைக் கொள்கையினைப் பவுல் பொருத்திக் காட்டியிருக்கிறார் (எபேசியர் 6:1, 2). இன்றும் கூட, பிள்ளைகளின் அடங்காத்தனம், பின்வரும் தலைமுறைகளில் எதிர்மறையான பாதிப்புகளை உண்டுபண்ணிவிடும். பிள்ளைகள் கீழ்ப்படிதலுள்ளவர்களாயிருப்பதும், கீழ்ப்படியாமற் போவதும், பெரியவர்களை மதிப்பதற்கு, சிறுவயதுமுதலே பிள்ளைகளுக்கு பெற்றோர் கற்றுக் கொடுப்பதைப் பொறுத்துதான் இருக்கிறது என்பதை நமக்கு அனுபவம் கற்றுக்கொடுக்கிறது.*

*எனவே உங்களது பேரப்பிள்ளைகள் ஆசிர்வதிக்கப்படுவதும், சபிக்கப்படுவதும், ஓரளவிற்கு, நீங்கள் உங்கள் பிள்ளைகளை எவ்விதமாக வளர்க்கிறீர்கள் என்பதைப் பொறுத்துதான் இருக்கப் போகிறது, உங்கள் பேரப்பிள்ளைகளுக்கு ஓர் நல்ல எதிர்காலம் அமைவதற்கான வகையில் உங்கள் பிள்ளைகளுக்கு நீங்கள் எவ்விதமாக கற்றுக் கொடுக்க முடியும்?*

## உங்கள் சொந்த உடல் நலத்தில் கவனமாயிருங்கள்

*முதலாவது, உங்கள் உடல் நலத்தை கவனித்துக் கொள்ளுங்கள். நீங்களும் உங்கள் வாழ்க்கைத் துணைவரும் உங்களது சரீர ஆரோக்கியத்தைக் கவனித்துக் கொள்ள வேண்டியது அவசியம். இல்லையேல், உங்கள் பேரப்பிள்ளைகளைக் காணுமளவிற்கு நீங்கள் நெடுநாள் வாழமுடியாமற் போய்விடும். நீங்கள் ஏன்*

*உங்களை கவனித்துக் கொள்ள வேண்டும்?*

*உங்கள் உபயோகத்திற்கென்று உங்கள் சரீரங்களை தேவன் உருவாக்கினார், ஆயினும் அவை அவருக்கே சொந்தமானவை. அவைகளை வேண்டுமென்றே துஷ்பிரயோகம் செய்வதற்கு உங்களுக்கு எவ்வித உரிமையுமில்லை (1 கொரிந்தியர் 6:19, 20).*

*கிறிஸ்தவர்களுக்குள் பரிசுத்த ஆவியானவர் குடியிருக்கிறபடியால், நீங்கள் தேவனுடைய வாசஸ்தலமாயிருக்கிறீர்கள் (நடபடிகள் 2:38; 5:32; கலாத்தியர் 4:6; 1 கொரிந்தியர் 3:16; ரோமர் 8:9). நீங்களும் உங்கள் துணையாளியும் கிறிஸ்தவர்களாயிருப்பீர்களேயானால், இது உங்கள் சரீரங்களை நீங்கள் கவனித்துக் கொள்ள வேண்டுமென்ற விசேஷித்த கடமையை உங்கள்மேல் சுமத்துகிறது.*

*நீங்கள் திருமணம் செய்துகொள்ளும்போது, இன்னொரு நபரையும் கூட கவனித்துக் கொள்ள வேண்டிய அதிகப்படியான பொறுப்பையும் ஏற்றுக்கொள்ளுகிறீர்கள், அவ்வாறிருக்கையில், நீங்கள் நோய்வாய்ப்பட்டு விட்டால், அல்லது சீக்கிரமே இறந்துபோனால் அந்தப் பொறுப்பினை நீங்கள் தொடர்ந்து நிறைவேற்றிட இயலாமற் போகும். எனவே நீங்கள் தொடந்து ஆரோக்கியமுள்ளவர்களாயிருப்பதற்கும், கூடுமானவரை நெடுநாள் உயிரோடிருப்பதற்கும் உங்களாலியன்றதை நீங்கள் செய்திட வேண்டுமென்ற கடமை உங்களுக்கிருக்கிறது.*[5]

## *உங்கள் மணவாழ்வில் கவனமாயிருங்கள்*

*இரண்டாவதாக, உங்கள் மணவாழ்க்கையை கவனித்துக் கொள்ளுங்கள். உங்களது மணவாழ்க்கையானது முறிந்து போகாமல், மகிழ்ச்சிகரமான, நீடித்த ஒன்றாக இருக்குமானால், உங்கள் பிள்ளைகளும் பேரப்பிள்ளைகளும் கூட வெற்றியுள்ளவர்களாயிருப்பதற்கு அதிக சாத்தியமுண்டு. முறிவடைந்ததோர் இல்லத்திற்குள் வளரும் பிள்ளைக்கு, வளர்ந்து வரும் காலத்தில் மட்டுமல்லாமல், பின்னர் திருமணம் செய்து கொள்ளும் காலத்திலும் கூட பிரச்சனைகள் ஏற்படுவதற்கு அதிக சாத்தியமிருக்கிறது. உண்மையிலேயே, பிள்ளைகளுக்கு, வேறெதைக் காட்டிலும் அவசியமானது எதுவென்றால், அது தங்கள் தகப்பனும் தாயும் ஒருவர் மேலொருவர் அன்புள்ளவர்களாய், ஒருவருக்கொருவர் கடமைப்பட்டவர்களாயிருக்கிறார்கள் என்ற நம்பிக்கை ஒன்றுதான். அத்தகைய நம்பிக்கையானது, வேறெதுவுமே தரக்கூடாததோர் பாதுகாப்பு உணர்வினை அவர்களுக்குத் தந்திடும். உங்கள் வாழ்க்கை துணையுடன் உங்களுக்குள்ள நேசத்தை வளர்த்துக் கொள்ள புதுமையான வழிமுறைகளைத் தேடி, மணவாழ்க்கை சிறப்பதற்கு தேவனுடைய வழிமுறைகளை நீங்கள் விவேகமாய் பின்பற்றி, உங்கள் துணையாளியின் தேவைகளை நிறைவேற்றுவதற்கு முழுமூச்சுடன் செயல்படும்போது, நீங்கள் உங்களது வாழ்க்கையையும் சமூகத்தையும் மட்டுமல்லாமல் உங்களது பேரப்பிள்ளைகளையும் கூட ஆசீர்வதிக்கிறீர்கள்.*

## *உங்கள் முன் மாதிரியில் கவனமாயிருங்கள்*

*மூன்றாவதாக, உங்கள் பிள்ளைகள் எப்படிப்பட்டவர்களாயிருக்க*

வேண்டுமென நீங்கள் விரும்புகிறீர்களோ அப்படிப்பட்டவர்களாய் இருங்கள். சரியானது எது என்பதை பிள்ளைகளுக்கு சொல்லிக் கொடுப்பது எவ்வளவு முக்கியமானதோ அதைவிட பிள்ளைகளுக்கு முன்மாதிரியாக வாழ்ந்து காட்டுவது அதிக முக்கியமானது. சிற்சில சமயங்களில் உங்கள் பிள்ளைகள் நீங்கள் சொல்வதை வேண்டுமானால் கேட்கிறவர்களாயில்லாமலிருக்கலாம்; ஆனால் நீங்கள் செய்வதையெல்லாம் அவர்கள் கவனித்துக் கொண்டிருப்பார்கள். பலவகையில், அவர்கள் உங்களைப் போலத்தான் மாறப் போகிறார்கள்.[6] பிற்பாடு அவர்களது பிள்ளைகளும்கூட பெரும்பாலும் அவர்களது காலடிகளையே பின்பற்றுவார்கள். எனவே உங்களது பிள்ளைகள் நேர்மையானவர்களாயிருக்க வேண்டுமென நீங்கள் விரும்புவீர்களேயானால், நீங்கள் நேர்மையானவர்களாயிருப்பது அவசியம். அவர்கள் கடினமாய் உழைப்பவர்களாயிருக்க வேண்டுமென நீங்கள் விரும்புவதாயிருந்தால், நீங்கள் ஒரு கடின உழைப்பாளியாய் திகழவேண்டும். அவர்கள் மரியாதையுடையவர்களாயிருக்க வேண்டுமென நீங்கள் விரும்பினால், நீங்கள் மரியாதையுடையவராயிருக்க வேண்டும். அவர்கள் தேவசித்தம் செய்வதற்கு முதலிடம் அளிப்பவர்களாயிருக்க வேண்டுமென நீங்கள் விரும்பினால், நீங்கள் உங்களது வாழ்க்கையில் தேவனுடைய இராஜ்ஜியத்திற்கு முதலிடம் அளித்திடவேண்டும். அனைத்திற்கும் மேலாக, தேவனுடைய வழிமுறைகளின்படி அவர்கள் வாழ்ந்திட வேண்டுமென நீங்கள் விரும்பினால், நீங்கள் உங்களாலானமட்டும் அவர்களுக்கு முன்பாக கிறிஸ்தவ வாழ்க்கை வாழ்ந்திட முயற்சிக்க வேண்டும்.

உங்கள் பிள்ளைகள் "ஒரு பிரசங்கத்தைக் கேட்பதை விட, அதைக் கண்கூடாகக் காணவே விரும்புகின்றனர்" என்பது முற்றிலும் உண்மையே. உங்களது பேரப்பிள்ளைகள் மகத்தானவர்களாயிருக்க வேண்டுமென நீங்கள் விரும்புகிறவராயிருந்தால், உங்களது முழுவாழ்க்கையுமே, நன்மையும் தேவபக்தியுமான வாழ்க்கை வாழ்வதெவ்வாறு? என்பதைப் பற்றியதோர் பிரசங்கமாக இருந்திடட்டும்.

## உங்கள் போதனையில் கவனம் செலுத்துங்கள்

நான்காவதாக, உங்கள் பிள்ளைகளைக் கர்த்தருடைய சிட்சையிலும் போதனையிலும் வளர்க்க வேண்டும். எபேசியர் 6:4ல் உள்ள புத்திகூறுதலானது. தகப்பன்மாருக்கு எழுதப்பட்டிருந்தது, ஆனால் தேவனுடைய வசனமானது பிள்ளைகளுக்கு வீட்டிலேயே போதிக்கப்படுவதற்கு பெற்றோராகிய இருவருமே பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும்.

தங்களது பெற்றோரோடு சேர்ந்து பாடியதையும், ஜெபித்ததையும், வேதாகமக் கதைகளைத் தங்கள் பெற்றோர் சொல்லக் கேட்டிருந்ததையும், தங்கள் இளவயதின் நினைவுகளில் கொண்டிருக்கக் கூடிய பிள்ளைகள் மிகவும் சந்தோஷமானவர்களாயிருப்பார்கள். இத்தகைய நினைவுகள் எதையுமே கொண்டிருக்க முடியாத பிள்ளைகளைவிட, இப்படிப்பட்ட பிள்ளைகள் வளர்ந்து கிறிஸ்தவர்களாக இருப்பதுமல்லாமல், தங்களுடைய பிள்ளைகளும் கிறிஸ்தவர்களாகும்படி போதிக்கப்படுவதற்கு அதிக சாத்தியமுண்டு.

## உங்கள் குடியுரிமையில் கவனமாயிருங்கள்

ஐந்தாவதாக, உங்கள் பிள்ளைகளை பொறுப்புள்ள, பயனுள்ள

*குடிமக்களாக வளர்ந்திடுங்கள். யாராவது உங்கள் பேரக்குழந்தைகளை பத்திரமாக கவனித்துக் கொள்ள வேண்டியது அவசியமாயிருக்கிறது. அதனால், ஜெயிலுக்கு போய்விடாமல், தங்களையும் கவனித்துக் கொண்டு, இவர்களையும் பொறுப்புடன் பராமரிக்கின்றவர்களான பெற்றோர்கள் இவர்களுக்கு தேவையாயிருக்கிறது. உங்களது பேரப்பிள்ளைகளின் பெற்றோர் இந்த தகுதியாம்சங்களின்படி இருப்பார்களா இல்லையா என்பது ஓரளவிற்கு நீங்கள் அவர்களை வளர்க்கின்ற முறையைப் பொறுத்ததாயிருக்கிறது. நீங்கள் பிள்ளைகளை உடையவர்களாயிருந்தால், அவர்கள் பொறுப்புள்ள, சட்டத்துக்கு கட்டுப்பட்ட குடிமக்களாயிருப்பதற்கு உங்களாலான மட்டும் அவர்களுக்கு கற்றுக் கொடுங்கள்.[7]*

*உங்களது பிள்ளைகள் பயனுள்ள குடிமக்களாக மாறுவதற்கு நீங்கள் உதவிகரமாயிருக்கும் பணியில், அநேக கொள்கைகளும் நடவடிக்கைகளும் சம்பந்தப்பட்டிருக்கின்றன. உழைக்கவும் பொறுப்புகளை ஏற்றுக்கொள்ளவும் அவர்கள் கற்றுக் கொள்வதற்கு நீங்கள் உறுதுணையாயிருங்கள். பிறரிடம் முறையாக நடந்து கொள்வதற்கும், அதிகாரத்தை மதிப்பதற்கும், நல்ல குடிமக்களாயிருப்பதற்கும் அவர்களுக்கு கற்றுக் கொடுங்கள். அவர்கள் கற்றுக்கொள்வதற்கு நீங்கள் உதவிடுங்கள்; உங்களாலான மட்டும் அவர்களுக்கு மிகவும் சிறப்பானதோர் கல்வியை அளித்திடுங்கள். அவர்களது தனிப்பட்ட தாலந்துகளையும் திறமைகளையும் அவர்கள் விருத்தி செய்து கொள்வதற்கு உற்சாகமூட்டுங்கள். பணத்தைக் கையாளுதல், பிரச்சனைகளை சரிசெய்தல், வரவு செலவைக் கணக்கிட நேரம் ஒதுக்குதல் போன்ற அன்றாட பொறுப்புகளை சமாளிப்பதில் அவர்களுக்கு வழிகாட்டுதல் அளித்திடுங்கள்.*

*பெரும்பாலான பெற்றோர்கள், பின் விளைவுகளைப் பற்றி அவ்வளவாய் சிந்திக்காமலேயே, இந்தப் பொறுப்புகளை ஏற்றுக் கொள்ளுகிறார்கள். எப்படியிருப்பினும், சமூகத்தின் பயனுள்ள அங்கங்களாய் உருவாவதற்கு உங்கள் பிள்ளைகளுக்கு நீங்கள் உதவிடுவீர்களேயானால், சிறந்த பேரப்பிள்ளைகளை உடையவர்களாயிருப்பதற்கு நீங்களே உங்களுக்கு உதவிடுபவர்களாயிருப்பீர்கள்.*

## உங்கள் பிள்ளைகளின் திருமணத்தில் கவனமாயிருங்கள்

*ஆறாவதாக, உங்களது பிள்ளைகள் கிறிஸ்தவர்களை திருமணம் செய்துகொள்ளும்படி ஊக்கப்படுத்துங்கள். அவர்கள் கிறிஸ்தவர்களாக உருவாகும் வகையில் நீங்கள் அவர்களை வளர்ப்பது மட்டுமல்லாமல், அவர்கள் பெரியவர்களாகும் போது கிறிஸ்தவர்களாகிய வாழ்க்கைத்துணைகளையே தேர்ந்தெடுக்கும்படி அவர்களை ஊக்கப்படுத்துவதும் அவசியமாயிருக்கிறது. எவ்வகையில்? கிறிஸ்தவ வாழ்க்கைத் துணையைப் பெற்றிருப்பதன் முக்கியத்துவத்தை உங்கள் பிள்ளைகளுக்கு நீங்கள் போதிக்கலாமென்பது தெரிந்ததே. நீங்கள் செய்ய வேண்டியது அவ்வளவுதானோ?*

*பிள்ளைகள் யாரைத் திருமணம் செய்து கொள்ள வேண்டுமென்பது தங்கள் கட்டுப்பாட்டிலில்லை என சில பெற்றோர்கள் இதற்கு மறுப்பு தெரிவிக்கலாம். ஆயினும், வாலிப ஆண்களும் பெண்களும் தங்களது துணைகளைத் தாங்களே*

தேர்ந்தெடுத்துக் கொள்ளும் சமூகங்களிலும் கூட அந்தத் தெரிவைப் பொறுத்தவரையில் பெற்றோர் செய்ய வேண்டியதொரு காரியமுண்டு. பெற்றோர் என்ற வகையில், உங்களது பிள்ளை எப்படிப்பட்டவர்களோடு பழகவேண்டு மென்று, பெருமளவிற்கு, நீங்கள் கட்டுப்படுத்திட முடியும். பெரும்பான்மையான சம்பவங்களில் நடந்தது போல உங்களது பிள்ளையும் கூட, அவனோடு அல்லது அவளோடு சேர்ந்து பழகிவந்த மற்றும் சகவாசமாயிருந்த யாரோ ஒருவரைத்தான் திருமணம் செய்துகொள்ளப் போகிறான்(ள்). உங்களது பிள்ளை கிறிஸ்தவர்களோடு சேர்ந்து பழகும்படி ஊக்கப்படுத்துவீர்களேயானால் அல்லது அதற்கு வழிவகை செய்வீர்களேயானால், அதன் பலனாக, உங்கள் பிள்ளை ஒரு கிறில்தவரையே திருமணம் செய்து கொள்வதற்கு வாய்ப்பிருக்கிறது.

உதாரணத்திற்கு, கிறிஸ்தவ பள்ளிகளில் அல்லது கல்லூரிகளில் உடன்பயில்பவர்களில் பெரும்பாலானோர் கிறிஸ்தவர்களாய் இருப்பார்களென்பதை அறிந்து, பெற்றோர்கள், தங்களது திராணியிருக்குமானால், தங்கள் பிள்ளைகளை அத்தகைய கல்விநிலையங்களுக்கு அனுப்பிவைக்கலாம். அதுபோலவே, பெற்றோர்கள், தங்கள் பிள்ளைகள் கிறிஸ்தவ இளவயதினரோடு கலந்துரையாடுவதை ஊக்கப்படுத்தும் வகையில் மற்றும் பல வாய்ப்புகளையும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். உங்கள் வட்டாரத்திலுள்ள சபையானது இளவயதினருக்கான நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்யலாம் அல்லது சபை முகாம்களை நிகழ்த்தலாம். ஒரு பிள்ளையானது இளம் கிறிஸ்தவர்களோடு காலம் கழித்த பின்னரும் கூட, ஒரு கிறிஸ்தவரைத்தான் திருமணம் செய்து கொள்ளுமென்பதற்கு எவ்விதம் நிச்சயமில்லை: இருந்த போதிலும் மற்ற இளம்கிறிஸ்தவ மக்களோடு சம்பந்தப்படாதவர்களைவிட, சபைக்குள் நண்பர்களையுடைய பிள்ளைகள் கிறிஸ்தவர்களைத் திருமணம் செய்து கொள்வதற்கு அதிக வாய்ப்பிருக்கிறது.

ஒரு வாழ்க்கைத் துணையைத் தேர்ந்தெடுப்பதில், “நெருக்கத்திற்கு உள்ள சக்தி” எனது வாழ்க்கையில் எடுத்துக் காட்டப்பட்டிருந்தது. நான் அபிலீன் கிறிஸ்தவ கல்லூரியில் சேர்ந்து படித்தேன் (அது தற்போது அபிலீன் கிறிஸ்தவ பல்கலைக் கழகம்). அங்கே நான் அந்த அழகிய ஷர்லாட் ஷேனனை சந்தித்து, திருமணம் செய்துகொண்டேன். அந்த அபிலீன் கிறிஸ்தவ கல்லூரியில் நான் ஓர் கிறிஸ்தவளைச் சந்தித்து மணம் முடித்துக் கொண்டது எதிர்பாராமல் நடந்த ஓர் நிகழ்வா? நான் அதை நம்ப மாட்டேன், நான் அக்கல்லூரியில் படிக்கும்போது, அந்த பள்ளியில் பயிலும் ஓர் கிறிஸ்தவ பெண்ணை சந்தித்து அவளை திருமணம் செய்துகொள்ள வேண்டுமென்று எண்ணம் கொண்டிருந்தேன் - அவ்வாறே செய்து முடித்தேன்!

“நெருக்கத்திற்கு உள்ள சக்தி”யைப் பொறுத்தவரையில், தங்களது பிள்ளைகளின் வாழ்வுகளில், கிறிஸ்தவ பெற்றோரது தாக்கம் கொஞ்சம் இருக்கத்தான் செய்கிறது. தங்களது பிள்ளைகள் கிறிஸ்தவர்களை திருமணம் செய்து கொள்ளும்படியாக அவர்களை ஊக்கப்படுத்துவதற்காக இந்த செல்வாக்கை பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அவ்வாறு அவர்கள் செய்தால், அவர்கள் தங்களது பிள்ளைகளுக்கு உதவிசெய்கிறார்கள், அதே சமயத்தில் தங்களுக்கே கூட உதவி செய்து கொள்ளுகிறார்கள்! அவர்கள், சிறந்த பேரப்பிள்ளைகளை உடையவர்களாயிருப்பதற்கான அடித்தளத்தை

*அமைக்கிறவர்களாயிருக்கிறார்கள்!*

## *முடிவுரை*

*பெரியவர்களுக்கும் பிள்ளைகளுக்குமுள்ள ஓர் முக்கியமான வேறுபாடு என்னவென்றால், பிள்ளைகள் பொதுவாகவே, தற்சமயத்திற்காக மட்டுமே வாழ்கிறவர்களாயிருக்கிறார்கள். அவர்களுக்கு இப்போது எது தேவையோ அதுதான் அவர்களுக்கு வேண்டும், அவர்களது செயல்களின் விளைவாக என்னநேரிடுமோ என்ற அக்கறை அவர்களுக்கில்லை. பக்குவப்பட்ட பெரியவர்களோ, தற்காலத்திலிருந்து, சாலையின் வெகுதூரம் வரை ஏறிட்டுப் பார்க்கிறார்கள். தங்களது செயல்களின் விளைவுகளைப் பற்றி அவர்கள் கவனமாயிருக்கிறார்கள். அவர்களுக்கு நெடுங்கால இலட்சியங்களுண்டு, அவைகளை எட்டிப்பிடிப்பதற்காக இப்போதைய சுகத்தை ஒத்திப்போடுவதற்கு மனமுள்ளவர்களாயிருக்கிறார்கள்.*

*நீங்கள் திருமணம் செய்துகொள்ளும்போது, உங்கள் முதிர்ச்சியை, முன்யோசனை செய்வதன்மூலம் வெளிக்காட்டுங்கள் - பிழைப்பதற்கு என்ன செய்வீர்கள், எங்கே வாழ்வீர்கள் என்பவைகளைப் பற்றி மட்டும் அல்லாமல், எதிர்காலத்தில் நெடுங்காலம் வரை நீடிக்கிற முக்கியமான விஷயங்களைப் பற்றி, விசேஷமாக, இந்த வாழ்வையும் தாண்டி சம்பந்தப்பட்டிருப்பவைகளைப் பற்றி முன் யோசனை செய்திடுங்கள்.*

*இந்த வாழ்க்கையில் நீங்கள் கருத்தில் கொள்ள வேண்டிய முக்கியமானவைகளில், நீங்கள் பேரப்பிள்ளைகளைப் பெறப்போகிறீர்கள் என்பதுவும் ஒன்றாயிருக்கிறது. உங்களுக்கு கட்டாயமாக சிறந்த பேரப்பிள்ளைகள் இருப்பார்களென்று (குறிக்கோளின் அடிப்படையில்) நீங்கள் உறுதிகூற முடியாது. ஆயினும் இந்த அற்புதமான ஆசீர்வாதத்தை பெற்றனுபவிக்கும் வகையில் திட்டமிட்டு உங்கள் வாழ்க்கையை வாழ்ந்திடலாம். உண்மையாகவே, மிகச்சிறப்பு வாய்ந்த பேரப்பிள்ளைகளை நீங்கள் பெறும்வகையில் உங்கள் பிள்ளைகளை நீங்கள் வளர்ப்பதற்கு தேவன் உதவிபுரிவாராக!*

---

*குறிப்புகள்*

[1]*ஒரு தம்பதியருக்கு குழந்தையே இல்லாமலிருப்பதும் பாவமல்ல.* [2]*ஆதியாகமம் 19 காண்க. பின்வந்த நூற்றாண்டுகளில், லோத்தின் சந்ததிகளுக்கும் (மோவாபியர், அம்மோனியர்), இஸ்ரவேலருக்கும் ஓயாத போராட்டம் இருந்து வந்திருக்கிறது.* [3]*"இது தேவனுடைய உலகமாயிருக்கின்றபடியினாலும், நாமெல்லாரும் இதிலே ஒருவரோடொருவர் சம்பந்தப்பட்டிருப்பதாலும், ஒரு தலைமுறையினர் தேவனுடைய சட்டத்தை மீறினால் அது பின்வரும் தலைமுறைகளைப் பாதிக்கும் என்பது நிச்சயமே"* (R. Alan Cole, *Exodus*, in *Tyndale Old Testament Commentaries* [Downers Grove, Ill.: InterVarsity Press, 1973], 156). *பெற்றோரது பாவங்களின் விளைவாக, இந்த சந்ததிகளும்கூட கர்த்தரை "பகைக்கிறவர்களாக" மாறிவிடும் நிலை வந்து விடும் என்பதை இந்த யாத்திராகமம் வசனப்பகுதி நமக்கு உணர்த்துகிறது.* [4]*"ஆயிரம்" என்று தலைமுறைகளைப் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. மூன்றாம் நான்காம் தலைமுறை வரை மட்டும் தண்டிக்கிற கர்த்தர், இரக்கம் செய்வதிலோ, ஆயிரமாவது தலைமுறை மட்டும் இரக்கம் செய்யப்போவதாக உயர்வு நவிற்சி மொழிநடையில் கூறியிருக்கிறார்*

*(NRSV யில் காண்க).* [5]*வியாதியும் மரணமும் தவிர்க்கமுடியாதவை. இந்தப் பத்தியில் சொல்லப்பட்டுள்ள ஆலோசனை என்னவென்றால், எவ்வளவு காலம் முடியுமோ அவ்வளவு காலம் ஆரோக்கியமாய் இருப்பதற்கு என்னவெல்லாம் செய்யமுடியுமோ அதை மணவாழ்விலுள்ள இருவருமே செய்திட வேண்டும் என்பதுதான். உதாரணத்திற்கு, கை கழுவுதல் போன்ற முறையான சுகாதாரத்தால், அல்லது புகையிலை புகைத்தல் மற்றும் மதுபானம் அருந்துதல் போன்றவற்றைத் தவிர்ப்பதால் சில நோய்கள் நமக்கு வராமல் தடுத்திடலாம்.* [6]*பெற்றோரது காலடிகளைப் பிள்ளைகள் அப்படியே பின்பற்றி விடுவதில்லை; அது நல்லதாயிருந்தாலும் கெட்டதாயிருந்தாலும் சரியே; ஒவ்வொரு நபருக்கும் ஒரு சுயவிருப்ப உரிமையும், தனிப்பட்ட பொறுப்பும் உண்டு. (எசேக்கியேல் 18 ஐக் காண்க.)* [7]*பிள்ளைகள் பலன்தரும் குடிமக்களாய் உருவாவதற்கு உதவிகரமாயிருக்கும் ஓர் நல்ல பகுதி நீதிமொழிகளின் புத்தகமாகும். அது சிக்கனம், உழைப்பு, அதிகாரத்தை மதித்தல், பேச்சிலே விவேகம், வாழ்வின் எல்லா விஷயங்களிலுமே சரியான கணிப்பை செயல்படுத்துதல் (ஞானம்) ஆகியவற்றைப் போதிக்கிறது.*